**<u>O.S.No.9/2024</u>**

<u>வா.சா.2, திருமதி.கலா</u>
நாள் : 23.10.2025 நேரம் : 11.45 AM

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1)எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் இல்லை, வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு வாதி புஷ்பவள்ளி கூறி தான் தெரியும் என்றால் சரியல்ல, நேரடியாக தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் வாதி வழக்கறிஞரிடம் யார் கூறி தயார் செய்யப்பட்டது என்றால் வாதி புஷ்பவள்ளி கூறி தயார் செய்யப்பட்டது. எனக்கு இந்த வழக்கின் விவரங்கள் தெரியாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2)நான் பிறந்த ஊர் புதுப்பட்டிணம். நான் உடைகுளத்தில் திருமணம் செய்து 40 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். வாதி புஷ்பவள்ளியின் கணவர் பெயர் தெரியுமா என்றால் தெரியும் கண்ணன். வாதி புஷ்பவள்ளியின் மாமனார் எப்போது இறந்தார் என்றால் சுமார் 5,6 வருடங்களுக்கு முன்னர் இறந்தார். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதி புஷ்பவள்ளியின் மாமனார் கார்மேகம் 30 வருடங்களுக்கு முன்னர் இறந்ததாக குறிப்பிட்டுள்ளது என்பது தவறு என்றால் சரிதான். வாதி புஷ்பவள்ளியின் மாமனார் கார்மேகத்திற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 ஆண்மக்கள் மற்றும் 2 பெண் மக்கள். நான் வாதி புஷ்பவள்ளிக்கு என்ன உறவு என்றால் உறவினர் இல்லை, ஒரே ஊரை சேர்ந்தவர்கள்.

3)வாதி புஷ்பவள்ளியின் மகனுக்கு எனது தங்கையின் மகளை திருமணம் முடித்துள்ளேன் என்றால் சரிதான். வாதி புஷ்பவள்ளியின் உறவினர் என்பதால்

நான் வாதி புஷ்பவள்ளிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு எத்தனை சொத்துகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2 புஞ்சை மற்றும் 1 வீட்டு இடத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வீட்டு இடத்தில் யார் வீடு உள்ளது என்றால் சுந்தராஜ்(4ம் பிரதிவாதி) மற்றும் ராஜேந்திரன் (1ம் பிரதிவாதி) வீடு உள்ளது. மேற்படி 1 மற்றும் 4 பிரதிவாதிகள் எத்தனை காலமாக மேற்படி வீட்டு இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சுமார் 5,6 வருடங்களாக வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள்.

4)வாதி புஷ்பவள்ளி மேற்படி 1,4 பிரதிவாதிகளின் வீட்டிற்கு அருகே வீடு கட்டி உள்ளாரா என்றால் சரிதான். வாதி புஷ்பவள்ளி தனியாக கிரையம் பெற்று வீடு கட்டியுள்ளார். வாதி புஷ்பவள்ளியின் கணவருக்கு கொடுக்கப்பட்ட பாகத்தில் தான் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அதே போல் கார்மேகத்தின் அனைத்து சொத்துகளையும் கார்மேகம் இறந்த பின்பு அவரது வாரிசுகள் பாகம் பிரித்து சுமார் 30 வருடங்களாக தனித்தனியே அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பாகம் பிரிக்கப்படவில்லை. நான் வெளியூரிலிருந்து திருமணம் செய்து வந்ததால் எனக்கு மேற்படி பாகப்பிரிவினை பற்றி தெரியவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் புஷ்பவள்ளி மற்றும் அவரது மகள் பாகம்பிரியாள் இருவரும் எனக்கு உறவினர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.00 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.10.23 17:03:47 +0530